பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 06 2026** **10 00**

ஞாயிற்றுக்கிழமை காலை

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் பெருமளவிலான நாடுகளால் கொண்டாடப்படும் சமூக நிகழ்வாக யோகா உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. நாட்டைக் கட்டமைப்பதில் ஐ.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

3. மாறிவரும் போர்முறைக்கு ஏற்ப பாதுகாப்புப் படையினரை தயார்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

4. இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் மறு நுழைவுத் தேர்வு இன்று நடைபெறுகிறது.

5. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உடல், மனநலன், நலவாழ்விற்கு உதவிடும் யோகக்கலை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்து வகையில், ஆண்டுதோறும் ஜூன் 21-ம் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

“ஆரோக்கியமான முதுமைக்கான யோகா” என்ற கருப்பொருடன் இந்த ஆண்டிற்கான சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது.

கொல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, யோகா வெறும் உடற்பயிற்சியாக மட்டுமின்றி உள்ளுணர்வை வெளிப்படுத்தும் கருவியாக திகழ்கிறது என்று கூறினார்.

யோகா தற்போது உலகின் பெருமளவிலான நாடுகளால் கொண்டாடப்படும் சமூக நிகழ்வாக உருவெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொல்கத்தாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச யோகா தினத்தில் பங்கேற்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் கூறினார்.

ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைந்த நலவாழ்விற்கு யோகா முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

யோகா அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதாக அவர் கூறினார்.

சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியம், யோகக்கலையின் மரபுகளை ஒன்றிணைத்து, நாடு முழுவதும் 100 முக்கிய இடங்களில் சிறப்பு சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளை மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்னை தியாகராயர் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில், மத்திய நிலக்கரித்த துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி பங்கேற்றார்.

சென்னையை அடுத்த மகாபலிபுரத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா நிகழ்ச்சியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

முன்னதாக நேற்று புதுதில்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், யோகா குறித்த விழிப்புணர்பு ஓட்டம் மற்றும் சிறப்பு ஜூம்பா அமர்வுக்கும் ஏற்பாடு செய்திருந்தது.

யோகாவை அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக இணைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இத்தினத்தையொட்டி உலகளவில் 2 ஆயிரத்து 500 இடங்களில் யோகா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

210க்கும் மேற்பட்ட இந்தியத் தூதரகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள யோகா அமர்வுகள், கூட்டு நல்வாழ்வுக்கான உலக அளவிலான இயக்கமாக அதன் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது.

இதனையடுத்து, ஷ்யாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்தில், சுயசார்புத் திட்டத்தின் கீழ், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட துனகிரி, சன்ஷோதக் மற்றும் அக்ரே ஆகிய மூன்று போர்க்கப்பல்களை  பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் தகுதியுடைய ஒவ்வொரு குடிமகனையும் சென்றடைவது உறுதி செய்யப்பட

வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

கோவா தலைநகர் பனாஜியில் நடைபெற்ற பிஜேபி மாநில செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர், கோவாவில் உள்ள அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளிலும் கட்சி அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி அமோக வெற்றி பெறும் வகையில் தொண்டர்கள் முனைப்புடன் பணியாற்ற வேண்டும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டைக் கட்டமைப்பதில் ஐ.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய அவர், தற்போது நாடு முழுவதும் மொத்தம் 23 ஐ.ஐ.டி. தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் உள்ளதாக தெரிவித்தார்.

தன்னம்பிக்கை, ஞானம் போன்ற அம்சங்களுடன் சுய சார்பு நிலையை எட்டுவதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் மேம்பாடு, ஆராய்ச்சி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஐ.ஐ.டி. மாணவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது என்று திரு. ஓம். பிர்லா கூறினார்.

<<<<>>>>

நிச்சயமற்ற புவிசார் சூழலுக்கிடையே மாறிவரும் போர்முறைக்கு ஏற்ப பாதுகாப்புப் படையினரை தயார்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் உள்ள கிழக்கு விமானப்படை தலைமையகத்தில், வீரர்களுடன் கலந்துரையாடிய அவர், பாதுகாப்புப் படையினரின் தொழில்நுட்பத் திறன், உத்திசார் தொலைநோக்குப் பார்வை, புதுமைக் கண்டுபிடிப்புகள் ஆகியவை மேம்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள், இணையவழி சவால்கள், தகவல் போர், தளவாடங்களின் மீள்திறன், விநியோக

நடைமுறைகளின் பாதுகாப்பு, ட்ரோன்கள் போன்றவை பாதுகாப்பு துறையில் முக்கிய அம்சங்களாக உருவெடுத்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, இந்தியா தற்சார்பு நிலையை அடைய வேண்டியதன் அவசியத்தை திரு ராஜ்நாத் சிங் மீண்டும் வலியுறுத்தினார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில், வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மேகாலயாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதியை மத்திய அரசே ஏற்றுக்கொள்வதால், மாநில அரசுகள் முக்கிய உள்கட்டமைப்பு, சமூக மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த முடிவதாகக் கூறினார்.

சாலைகள், பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள், மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பிற சமூக

உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில், இத்திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

<<<<>>>>

கால்நடைகளுக்கான தடுப்பூசி சோதனை மையம் மற்றும் தடுப்பூசி

உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் **Baghpath**-ல் உள்ள சௌத்ரி சரண்சிங் தேசிய கால்நடை சுகாதார நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இதுவரை கால்நடைகளுக்காக **42** தடுப்பூசி சோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன் மூலம் கால்நடைகளுக்கான தடுப்பூசியின் தரம், பாதுகாப்பு, செயல்திறனை உறுதி செய்வதற்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

<<<<>>>>

மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இன்று ராஜஸ்தான் செல்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது, அம்மாநிலத்தில் ரயில்வே கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவையான பல்வேறு முக்கிய ரயில்வே திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

பாகிஸ்தான் அதிபரின் கருத்துகளை நிராகரிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவின் உள்விவகாரங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்க அவருக்கு எவ்வித தகுதியும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் விவகாரத்தில், பாகிஸ்தானின் மிக மோசமான செயல்பாடுகள் குறித்து உலகளவில் விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், அந்நாட்டு அதிபரின் இத்தகைய கருத்துக்கள் தேவையற்றவை என்று திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் மறு நுழைவுத் தேர்வு இன்று நடைபெறுகிறது.

நாடு முழுவதிலும் **559** நகரங்களிலும், வெளிநாடுகளில் **14** நகரங்களிலும் நடைபெறும் இந்த தேர்வை **22** லட்சத்து **79** ஆயிரம் மாணவர்கள் எழுதுகின்றனர்.

இந்த தேர்வு இன்று பிற்பகல் **2** மணிக்கு தொடங்கி மாலை **5.15** மணி வரை நடைபெறுகிறது.

இதனையொட்டி தேர்வு மையங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், **9** விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான், **44** புள்ளி இரண்டு ஓவரில், **218** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து, **219** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்திய அணி, **28** புள்ளி **4** ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு **224** ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்தியா அனைத்துப் போட்டிகளிலும் வென்றது.

-------------------

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

மான்செஸ்டரில் இப்போட்டி இந்திய நேரப்படி இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

----------

இந்தியா - இலங்கை ஏ அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறுகிறது.

தம்புலாவில் இப்போட்டி காலை 10 மணிக்குத் தொடங்குகிறது.

---------

சீனாவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் Nikhil வெண்கலப் பதக்கம் வென்றார்.

------------

மலேசியாவில் நடைபெற்று வரும் ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியாவின் அபய் சிங் - வேலவன் செந்தில்குமார் இணை, இன்று பாகிஸ்தானின் நஸீர் இக்பால் - நூர் ஜமான் இணையை எதிர்கொள்கிறது.

----------

ஆசிய தொடர் ஓட்ட சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Shaoxing** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், கலப்பு ஆயிரத்து **600** மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

இப்போட்டியின் கலப்பு **400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

-------------

நேஷன்ஸ் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.

நியூஸிலாந்தின் ஆக்லாந்தில் நடைபெறும் இப்போட்டி மாலை **6.30** மணிக்குத் தொடங்குகிறது.

**<<<<The End>>>>**